**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 134/2020**

**வாதி தரப்பு சாட்சி-2 சுகப்பிரியா திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 12.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுகப்பிரியா | கிராமம் | |
| த/பெ / க/பெ. | மணிகண்டன் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 36 |

**முதல் விசாரணை**

எனக்கு இவ்வழக்கில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. நான் குளித்தலை வட்டாட்சியர் அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றுகிறேன். தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதியின் தகப்பனார் மொட்டைய கவுண்டர் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ளபடி தான் எங்களிடம் உள்ள வருவாய்த்துறை ஆவணங்களும் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ன் படிதான் சிட்டாவும் எங்கள் அலுவலகத்தில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் உள்ள சிட்டா உண்மை நகல் மற்றும் தாவா சொத்துக்களுக்கான அ பதிவேடு உண்மை நகல்களை தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி தாவா சொத்துக்கள் தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் அதற்கான ஆவணங்கள் அலுவலகத்தில் உள்ளது.

**வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்கள் தாக்கல் செய்ய முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**

**Kulithalai.**